IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# நாட்டிய நாடகத்தில் திருவிவிலியத்தின் பங்களிப்பு

# Thiruviviliam's Contribution to Dance Drama

**RESEARCH GUIDE**

**Dr. A. ARUL DASSE**

Assistant Professor

P.G & Research Department of Tamil

Arignar Anna Govt. Arts College

Villupuram (T.Nadu) – 605 602.

**RESEARCH SCHOLAR**

**A. JEBAMALAIMARY**

Ph.D (Full Time) Scholar

P.G & Research Department of Tamil

Arignar Anna Govt. Arts College

Villupuram (T.Nadu) – 605 602.

## நாட்டிய நாடகத்தில் திருவிவிலியத்தின் பங்களிப்பு

**முன்னுரை :**

நடனம், நாடகம் இரண்டிற்கும் கூத்து என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டது. சமீப காலமாகத் தான் இசை நாடகம் என்ற சொல் புழக்கத்தில் வந்துள்ளது. இசை நாடகங்கள், இசைப்பாடல்களும் செய்யுள் வகைகளும் சேர்ந்த இலக்கிய வகையைச் சேர்ந்தவையாகும். (ஆரளளைஉயட யனெ டுவைநசயசல குசழஅ ஊழஅடிைநென) இவைகள் ஒரு கதை வடிவில் எழுதப் பெற்றது. இசை வடிவில், கீர்த்தனைகள் சிந்து, தருபத்யங்கள், சுலோகங்கள் போன்றவைகளும் சேர்க்கப்பெற்றது, இடையிடையே உரைநடையும் கதையின் தொகுப்பிற்காக பயன்படுத்தப் பெற்று அமைந்துள்ளன.

நாட்டிய நாடகத்திற்கு திருவிவிலியம் அளப்பரிய பங்கினை ஆற்றியுள்ளது என கூறினால் அது மிகையாகாது. திருவிவிலியத்தைக் கொண்டு பல இலக்கியங்கள் உருபெற்றன. பெத்லகேம் குறவஞ்சி, எஸ்தாக்கியார் நாடகம், மதமாற்றம், சென்னைப் பட்டணப் பிரவேசம், ஞானத் தச்சன் நாடகம், புதிய பெத்லகேம் குறவஞ்சி, இயேசு காவியம் ஆகிய நூல்களில் சிலவற்றினைக் குறித்து பின்வருமாறு அறிந்துக் கொள்ளலாம்.

**நாட்டிய நாடகம் :**

கதை தழுவி வரும் ஆட்டமும் பாடலும் நிறைந்த நாடகத்தையே நாட்டிய நாடகம் என்று கூறுவர். பண்டையோர் இதனை கூத்து என்றே அழைத்தனர். முதன்முதலில் நாட்டியமும், நாடகமும் ஒன்றாக இணைந்தே இருந்தன. தனிப்பாடல்களுக்கு அபிநயம் பிடித்தலை நாட்டியம் எனவும் கதையைத் தழுவி வேடமிட்டு ஆடுதலை நாடகம் என்றும் கூறி வந்தனர்.

“இயலும் இசையும் சேர்ந்து கதையைத் தழுவி வரம் கூத்தே நாடகமாகும்”[1]. என்று பேரா.எம்மார். அடைக்கலசாமி கூத்தே நாடகமாகும் என சான்று பகர்கிறார்.

“கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்

போக்கு மதுவிளிந் தற்று.”[2]

இக்குறளின் வாயிலாக வள்ளுவரும் கூத்து என்ற சொல்லினைக் கையாண்டுள்ளார் என்பதை நம்மால் அறிந்துக் கொள்ள முடிகிறது. எனவே நாடகம் என்றாலும் கூத்து என்றாலும் ஒன்றே ஆகும்.

**நிருத்திய நாடகம் :**

நடனம் அபிநயம் ஆகியவற்றின் மூலம் வெவ்வேறு கலைஞர்கள் பிரத்யேக கதாபாத்திரங்களைத் தாங்கி கதையை சித்தரிப்பதற்கு நிருத்திய நாடகம் என்று பெயர். இதனை நடன நாடகம் என்றும் குறிப்பிடுவர். தென்னகத்தில் பிரத்யேகமாக விளங்கும் சில சாஸ்திரீய நடன நாடகங்களாவன, கேரளத்தின் கதகளி, ஆந்திரத்தின் குச்சிப்புடி, கர்நாடகத்தின் யஷ்கானம் போன்றவையாகும்.

**பெத்லகேம் குறவஞ்சி :**

பதினெட்டு உறுப்புகளைக் கொண்ட பல்வேறு கலம்பக நூல்களில் குறம் என்ற உறுப்பு ஒன்று ஆகும். கலம்பக நூல்களை ஆய்வு செய்யுமிடத்து தலைவியால் காதலிக்கப்பட்ட தலைவன் இத்தன்மை உடையவர் என்றும் தலைவி அவரை அடைதல் உறுதி என்றும் கூறப்பட்டிருக்கிறது. தலைவிக்கு குறமகள் குறிதேர்ந்து கூறுவதும் வெளிப்படுகிறது.

“குறத்தி தன் குலப் பெருமைகளைக் கூறி, குறமகள் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களில் நடப்பனவற்றை அறிந்து தன் ஆற்றல் வெளிப்படக் கூறி உரைப்பதையே குறிஞ்சிப் பாடல்”[3] எனப் பன்னிருப்பாட்டியல் நூற்பா கூறுகின்றது.

**பெத்லகேம் குறவஞ்சி தோன்றக் காரணம் :**

பேரிலக்கிய வடிவான காப்பியத்தை விலக்கி விட்டு சிற்றிலக்கிய வகையுள் ஒன்றான குறவஞ்சியை சாஸ்திரியார் தேர்ந்தெடுக்க காரணம் யாது என்பது ஆய்விற்குரியதாகவே உள்ளன. பெத்லகேம் குறவஞ்சியின் முன்னுரையில், ‘‘திருநெல்வேலி ராச்சியத்திற் பிரதான பள்ளிக்கூடங்களில் படிக்கிறதும், அவ்விடத்துக்கணியார் தேசத்திலெங்கும் நாட்டியமாடுகிறதுமான குற்றாலக் குறவஞ்சிக்கு எதிராய்ப் பாடிற்று’’[4] என்று ஒரு காரணம் தரப்படுகின்றது. இதனால், திருகுற்றாலக் குறவஞ்சிக்கு எதிராக எழுந்த நூல் பெத்லகேம் குறவஞ்சி என்பதை அறிய முடிகிறது.

**மூன்று பிரிவுகள் :**

பெத்லகேம் குறவஞ்சி நூல் மூன்று பிரிவுகளைக் கொண்டு திகழ்கிறது.

முதல் பிரிவில் திருமுழுக்கு யோவானின் அருளுரை சிறப்பாகக் காணப்படுகின்றது. உலா வந்த இயேசு பெருமானே திருச்சபையின் மணவாளன் திருச்சபை என்ற தேவமோகினியே சீயோன் மகள் ஆவாள். இவளுடைய பந்தாட்டம் இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

இரண்டாம் பிரிவில் பெத்லகேம் மலையில் பிறந்த குறி சொல்லுகின்ற குறவஞ்சி என்ற சிங்கி இடையில் கூடையையும், கையில் மந்திரக் கோலையும் உடையவளாத் தோற்றமளிக்கிறார். இவளுக்கு விசுவாசக் குறவஞ்சி என்ற பெயரும் உண்டு. இவள் சீயோன் மகளை நெருங்கி, உலா வருகின்ற இயேசு என்னும் மணவாளனுக்கு மனைவியாகப் போகின்றாய் என்று இறைவாக்கு உரைக்கின்றாய். இங்கு கானான் நாட்டின் வளத்தையும், திருமறை கூறும் மலைகளின் சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றாள்.

மூன்றாம் பிரிவில் குறத்தியாகிய சிங்கியும், குறவனாகிய சிங்கனும் உரையாடல் மூலமாக இயேசு பெருமானின் சிறப்புகளெல்லாம் எடுத்துக் கூறப்படுகிறது.

**பெத்லகேம் குறவஞ்சி அமைப்பு முறை :**

பெத்லகேம் குறவஞ்சியின் அமைப்பானது, இறை வாழ்த்து, இயேசுவின் உலா, தேவமோகினி காதல், குறத்தி குறி கூறல், சிங்கன் வருகை என்னும் ஐந்து பெரும்பகுதிகளைக் கொண்டதாகும். பாயிரம் முதலாக வாழ்த்து ஈறாக 72 உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது.

**இறை வாழ்த்து :**

இப்பகுதியில் வரும் கடவுள் வாழ்த்து, சரணத் தரு, தோடையம், மங்களம், தோத்திரத் தரு ஆகியன இறை வாழ்த்தாக அமைந்துள்ளன. ‘மங்களம்’ என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

‘‘சீரேசு நாதனுக்கு செய மங்களம்,
ஆதி திரியேக நாதனுக்குச் சுப மங்களம்’’

எனத் தொடங்கும் இப்பாடல் இன்றளவும் கிறித்தவர் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**இயேசுவின் உலா :**

கட்டியங்காரனாக யோவான் வருகிறார். அவர் இயேசு உலா வரப் போவதை முன்னரே அறிவிக்கிறார். இயேசுவின் பெருமைகளை எடுத்துரைத்து, அவரின் வருகைக்காக எருசலேம் நகரம் முழுவதுமாக விழாக்கோலம் கொள்கிறது. நகர மாந்தர்களும், தேவதூதர்களும் திருச்சபை கன்னியரும் கூடுகின்றனர். இயேசு உலா வருகிறார்.

**குறத்தி குறி கூறுதல் :**

இயேசுவின் பெருமைகளைக் குறத்தி கூறக் கேட்ட தலைவியை நாணம் மேற்கொள்ளவே அவள் முகம் சிவந்து விழி தாழ்கின்றாள். தன் கரத்தினைக் குறி

சொல்லும் குறத்தியிடம் நீட்டுகிறாள். தலைவியின் கரங்களைப் புகழ்ந்து தன் குறி பொய்க்காதிருக்கக் கடவுளை வணங்குகிறாள் குறத்தி. பின் குறி சொல்லத் தொடங்குகிறாள். 'பெத்லகேம் நாதர் உன்னை மணம் கொள்ள நாளை வருவார் சோலை வரும் மாலை வரும் சிலுவை மோதிரம் வரும்' என குறத்தி குறி சொல்கிறாள். இதனைக் கேட்ட தலைவி மகிழ்ச்சி அடைகிறாள். குறத்திக்குப் பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுத்து அனுப்பி வைக்கிறாள்.

**சிங்கன் வருகை :**

சிங்கன் பெத்லகேம் நாதனைப் பாடிக் கொண்டே வருகிறான். பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை முதலிய பாச வலைகளில் சிக்கித் தவிக்கும் மக்களைச் சேர்க்கும் 'ஞான வலை' அவனிடம் இருககிறது. பறவை வேட்டையில் சிங்கனுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அதனால் அவனுக்கு சிங்கியின் நினைவு வருகிறது. குறத்தியைத் தேடி, சிங்கன் வருகிறான். பின்னர் சிங்கன் சிங்கியைக் கண்டு விடுகிறான். அவர்களிடையே நிகழும் உரையாடல் சுவையாக அமைந்துள்ளது.

"இத்தனை காலமாய் என்னிடம் கேளாமல்
எங்கே நீ சென்றனை சிங்கி? - மா
பெத்தல கேம்நகர் சீயோன் குமாரிக்குப்
பத்திக்குறி சொல சிங்கா."[5]

இவ்வாறு இருவரும் உரையாடுகின்றனர். மேலும் குறத்தி அணிந்துள்ள பல்வேறு அணிகலன்களையும் பார்த்து வியந்து சிங்கன் வினவுகிறான். அதற்குச் சிங்கி நயமாகப் பதிலளிக்கிறாள். பின்னர் இருவரும் கடவுளைப் போற்றி துதித்தார்கள்.

பிறகு இறுதி வாழ்த்தோடு பெத்லகேம் குறவஞ்சி நிறைவு பெறுகிறது. இக்குறவஞ்சி வழியாக வேதநாயக சாஸ்திரியார் கிறித்தவ சமயக் கருத்துக்களை இலக்கிய நயத்தோடும், மக்கள் பண்பாட்டோடு இயைந்த விதத்திலும் எடுத்துக் கூறியுள்ளார்.

சென்னைப் பட்டணம் பிரவேசம், ஞான ஏற்றப்பாட்டு, ஞானத்தச்சன் நாடகம், ஞானக் கும்மி, ஆதியானந்தம், பராபரன் மாலை, ஞான உலா, ஞான அந்தாதி முதலான 52 நூல்களைப் பாடியுள்ளார்.தமிழகப் பக்தி நெறிப்படி கர்த்தரை வழிபட வழிகாட்டியவர் இவரேயாவர்.

**எஸ்தாக்கியார் நாடகம் :**

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்க் கத்தோலிக்க மக்களிடையே மிகப்பெரும் வரவேற்பைப் பெற்ற கலைநிகழ்ச்சி கிறித்தவ புனிதர்கள் மற்றும் அடியார்களின் வரலாற்றை எடுத்துக் கூறுவது நாடகமாகும். இவற்றை நாட்டுக் கூத்து என்றும் அழைப்பர். இவ்வகை நாடகங்கள் (அ) நாட்டுக் கூத்துகள் யாழ்ப்பாணத்தில் படைக்கப்பட்டன.

எடுத்துக்காட்டாக, தேவசகாயம்பிள்ளை நாடகம், ஞான சவுந்தரி நாடகம், மரியதாசன் நாட்டுக் கூத்து, விசய மனோகரன் நாட்டுக் கூத்து, எஸ்தாக்கியார் நாடகம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் எஸ்தாக்கியார் நாடகம் குறித்து பின்வருமாறு தெரிந்துக் கொள்ளலாம்.

**பாடிய புலவர் :**

எஸ்தாக்கியார் நாடகத்தைப் பாடியவர் மதுரக்கவிப்புலவர் மாதகல்வ சூசைப்பிள்ளை (1877-1955). பாடுவித்தவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த ம.கி. பொன்னுதுரை பாடப்பட்ட ஆண்டு 1903 ஆகும். பல இடங்களில் நடிக்கப்பட்ட அந்த 'நாட்டுக் கூத்து' முதல் முறையாக 1928 - இல் அச்சேறியது. நூலைப் பார்வையிட்டு, நாடகமாக நடிப்பதற்கு இசைவு வழங்கியவர் நல்லூர் ஞானபிரகாச அடிகளார் என்பது இந்நூலில் காணப்படுகிறது

மேலும் பாடலாசிரியர் இயற்கைப் புலமைமிக்கவராகத் திகழ்ந்தார் என்றும், இவரது புலமைத் திறனைக் கண்டுணர்ந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் இவருக்கு 'மதுரகவிப் புலவர்'என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தனர் என்றும் அவரது பிற படைப்புகள் சங்கிலியன் நாடகம், கருங்குயிற் குன்றத்துக் கொலை நாடகம் முதலியனவாகும் எனவும் நூல் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

**எஸ்தாக்கியார் வரலாறு :**

எஸ்தாக்கியார் நாடகம் பற்றி சில தகவல்களைப் பின்வருமாறு அறிந்துக் கொள்ளலாம்.

எஸ்தாக்கு ∴ எஸ்தாக்கியார் என்னும் பெயருக்கு இணையான ஆங்கில வடிவம் நுரளவயஉந.∴நுரளவயஉாரைள.∴நுரளவயவாரைள என்பதாகும். இவரைப் பற்றி மரபுவழி வந்த கதைக்கு வரலாற்று அடிப்படை இல்லை என்னும் காரணத்தால் இவரது பெயர் கத்தோலிக்கத் திருச்சபையின் வழிபாட்டு நாட்காட்டியிலிருந்து 1969 - ஆம் ஆண்டு நீக்கப்பட்டது.

துணை நல்கும் பதினான்கு புனிதர்கள் (குழரசவநநெ ர்ழடல ர்நடிநசள) என்னும் வரிசையில் இவர் பெயருண்டு. எனவே பல காலமாக மக்கள் இவருக்கு வணக்கம் செலுத்தி உதவி நாடிச் சென்றிருக்கிறார்கள். புனித எஸ்தாக்கியார் வணக்கம் தமிழ் நாட்டில் குறிப்பாகத் தென்மாவட்டங்களிலும், ஈழத் தமிழரிடையேயும் நிலவியது. அவ்வணக்கத்தைப் பரப்பியதில் 'எஸ்தாக்கியார் நாடகம்' பெரும்பங்கு வகித்தது.

**எஸ்தாக்கியார் பற்றிய மரபு கதை :**

கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியில் பிலாசிது (ீடயஉனைரள) என்னும் பேர் கொண்ட உரோமைப் படைத்தலைவர் ஒருவர் இருந்தார். அவர் திரையானு (வுசயதயஸ) என்ற உரோமைப் பேரரசனின் கீழ் பணிபுரிந்து வந்தார். தம் மனைவியோடும் இரு பிள்ளைகளோடும் காட்டில் வேட்டையாடச் சென்ற அவர் அழகிய கலைமான் ஒன்றைக் கண்டு அதைப் பிடிப்பதற்காக

துரத்திச் சென்றார். அதன் கொம்புகளுக்கு நடுவே ஒளிமயமான ஒரு சிலுவை தோன்றியதைக் கண்டு அதிர்ச்சியில் ஆழ்ந்துப் போனார்.

கிறித்தவ சமயத்தைத் தழுவ கடவுள் தம்மை அழைக்கின்றார் என்று உணர்ந்த அவர் திருச்சபையில் திருமுழுக்கு (ஞானஸ்தானம்) பெற்று ‘எஸ்தாக்கு’ என்னும் பெயரைச் சூடிக்கொண்டார். அவருடைய குடும்பத்தாரும் கிறித்தவராயினர்.

மகிழ்ச்சியோடு குடும்பம் நடத்திய எஸ்தாக்கியாருக்குத் துன்பங்கள் ஒவ்வொன்றாக வர ஆரம்பித்தன. விவிலியத்தில் வருகின்ற ‘யோபு’ என்னும் நேர்மையாளருக்கு நேர்ந்தது போல எஸ்தாக்கியாரின் செல்வமெல்லாம் பறி போயிற்று அவருடைய மனைவியாரைப் பிடித்துக் கொண்டு போயினர் தம் இரு பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு ஓர் ஆற்றைக் கடந்து சென்ற வேளையில் அவர் தம் அன்பு மக்களை ஓநாயும், சிங்கமும் இழுத்துச் சென்றுவிட்டன. இத்துயரங்களுக்கு நடுவிலும் எஸ்தாக்கியார் கடவுள் மீது கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையை இழக்கவில்லை.

இறுதியாக, கடவுளின் திருவருளால் அவர் தாம் இழந்த அனைத்தையும் திரும்பப் பெற்றார். இத்தோடு ‘எஸ்தாக்கியார் நாடகம்’ முற்றுப் பெறுகிறது.

ஆதிரியன் (ர்யனசயைெ) பேரரசன் காலத்தில் எஸ்தாக்கியார் தம் கிறித்தவ நம்பிக்கையில் உறுதி இருந்ததால் கொலைத் தண்டனைக்கு ஆளானார் என்பது மரபுவழி வரலாறு ஆகும்.

**மதமாற்றம் என்னும் நாடகம் :**

ஈழத்துத் தமிழ் நாடக உலகைப் பற்றி எழுதும் எவரும் அறிஞர் அ. கந்தசாமியின் ‘மதமாற்றம்’ நாடகத்தை மறக்க முடியாது. 1967- இல் கொழும்பில் லும்பினி அரங்கில் நான்கு தடவைகள் மேடையேறி மிகுந்த வரவேற்பினைப் பெற்ற நாடகம் மட்டுமல்ல, அதன் கூறு பொருள் காரணமாகப் பலத்த சர்ச்சைக்குமுள்ளாகிய நாடகமும் கூட.

சைவப் பழமான சிவப்பிரகாசம் அவர்களின் மகளான மீனாவும், கிறிஸ்தவ இளைஞனான யோசப்பும் காதலிக்கின்றனர். அதற்கு மீனாவின் பெற்றோரிடமிருந்து பெரும் எதிர்ப்பு கிளம்புகின்றது. தம் காதலில் இருவரும் உறுதியாக நிற்கின்றார்கள். பெற்றோர் அவளுக்கு இந்து சமயத்தைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்து வைக்க முயலுகின்றனர். அதனால் மீனா வீட்டை விட்டே ஓடுகின்றாள்.

அதே சமயம் இந்துவான மீனாவை மணம் முடிப்பதற்காக யோசப்பு பாலசந்திரன் என்னும் இந்துவாக மதம் மாறுகின்றான். மீனாவோ அவனை மணம் முடிப்பதற்காக ஷீலா என்னும் கிறிஸ்தவப் பெண்ணான மதம் மாறுகின்றாள். உண்மையில் இந்துவாக மதம் மாறிய யோசப்பைத் தான் மீனாவுக்கு மணம் முடிக்க அவளது பெற்றோர் தீர்மானித்து இருந்தனர். அவர்களுக்கும் யோசப்பை தான் அவ்விதம் இந்துவாக மாறியிருந்தான் என்ற விசயம் தெரியாது.

மீண்டும் மதம் மாறிய காதலர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது இருவருமே தாம் மாறிய மதங்களைத் தீவிரமாகப் பின்பற்றும் விசுவாசிகளாக மாறி விட்டனர். ஷீலாவாக மாறிவிட்ட மீனா பாலச்சந்திரனாக மாறிவிட்ட யோசப்பை மீண்டும் தான் தற்போது நட்பும் நம்பும் கிறிஸ்தவ மதத்துக்கு மாறினால்தான் அவனுடன் ஒன்று சேர முடியும் என்று உறுதியாக நிற்கின்றாள். அது போல் பாலச்சந்திரனாக மாறிய யோசப்பும் ஷீலாவாக மாறிய மீனா மீண்டும் மீனாவாக மாறினால் தான் அவளுடன் சேர முடியுமென்று உறுதியாக நிற்கின்றான். மிகவும் கிண்டலும், ஆழமான கருத்துக்களையும் உள்ளடக்கிய உரையாடல்களுள் மேற்படி நாடகத்தின் கதையை அற்புதமாக அறிஞர் அ. ந. கந்தசாமி வடிவமைத்திருக்கின்றார்.

இந்நாடகத்தைப் பற்றி நூலின் முன்னுரையில் எழுத்தாளர் செ. கணேசலிங்கன் பின்வருமாறு கூறுகிறார். 'சைவ மதம், கிறிஸ்தவ மதம்' பற்றிய அன்னாரின் அறிவையும் இந்நாடகத்தில் காண முடிகிறது. கந்தசாமி மதம் என்ற கருத்தியலை இந்நாடகத்தில் சாடி இருப்பது இந்நாடகத்தின் தனிச்சிறப்பாகும். அதுவும் நேரடியாகத் தாக்கவில்லை.

பார்வையாளர் எம்மதத்தவராயினும் நகைச்சுவையுடன் நாடகத்தைப் பார்ப்பர். அதன் பின்புறத்தில் மதத்தின் பொய்மையை ஆசிரியர் உடைத்தெறிவதை சிந்தனை மூலம் அறிவர். கதாநாயகன் அசல் கிறித்தவன் கதாநாயகி சைவப்பழம். காதலுக்காக இருவரும் மதம் மாறுகின்றனர். மாறிய மதத்தை இறுகத் தழுவி காதலைக் கைவிடுகின்றனர்.

இதுவே கதையின் கருவானபோதும் 'மதம்', 'காதல்' என்ற பொய்மையை கந்தசாமி சாடும் திறமை அபாரம். 'மதமே பொய், ஒருவரும் பொய்களை நம்புகிறார்கள். ஆனால் வெவ்வேறு பொய்கள்' கந்தசாமி இராமலிங்கம் என்ற பாத்திரம் மூலம் கூறுகின்றார்.

**சென்னைப் பட்டணப் பிரவேசம் :**

சென்னை நகரத்தார் செய்த சீர்மையெல்லாம் கண்டு களிகூர்ந்த வேதநாயகம் 'சென்னைப் பட்டணப் பிரவேசம்' என்று ஒரு நொண்டி நாடகம் எழுதினார். சென்னையில் அன்பர்கள் அளித்த விருந்துகளும், செய்த சிறப்புகளும் அந்நாடகத்தில் இனிமையாக எடுத்துக் கூறப்படுகின்றன.

ஆயினும், குறவஞ்சி நாடகம் அரங்கேற்றுவதற்கு முன்னின்று உதவி செய்த முத்துசாமியர் பிள்ளை என்ற கிறிஸ்தவரை அந்நூலில் புகழ்ந்து பாடியிருப்பது நரஸ்துதியென்று பலர் கருதுகின்றனர்.

'பராபரனைப் பாடுகிறவனே பாக்கியவான்' என்று கூறும் வேத வசனத்திற்கு இந்நாடகம் மாறுபட்டதென்பது அன்னாரின் கொள்கை என இந்நூலிற்கு முகவுரை எழுதிய ஆசிரியர் கூறுவதாவது, 'நரஸ்துதி செய்தமையால், மூன்று வருஷத்துக்குள்ளே பல்லக்கு நாற்பது வராகனுக்கு விற்கப்பட்டழிந்து போனதுமன்றி அதைக் கொடுத்த சினேகிதர்களுடைய பட்சமும் வெகுதூரம் குளிர்ந்து போயிற்று' என்று கூறியதை அறிய முடிகிறது.

தமிழ்நாட்டில் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் பாமர மக்கள் பாட்டுப் பாடிக் கொண்டே பணி செய்தல் வழக்கம். நிலத்தில் ஏரைப் பிடித்து உழும் பொழுதும், களைப் பறிக்கும் பொழுதும், பாட்டாளிகள் பாட்டுப் பாடுவார்கள். தோட்டப் பயிர் செய்பவர்கள் கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து நிலத்திலே பாய்ச்சும் போது பாடுவார்கள். அப்பாட்டுக்கு

ஏற்றப்பாட்டு என்று பெயர். அதன் இனிமையறிந்தோர் ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை என்பர். 'மூங்கில் இலை மேலே, தூங்கும் பனி நீரை, வாங்கும் கதிரோனே' என்ற ஏற்றப்பாட்டு நாடறிந்ததாகும்.

ஏழை மக்களே பெரும்பாலும் ஏற்றமிறைத்துப் பணி செய்பவர் என்பதையறிந்த வேதநாயகம் அவர்களுக்கு ஏற்றப்பாட்டின் வாயிலாக ஞானத்தை ஊட்டக் கருதினார். அவ்வகையில் நூறு செய்யுளை இயற்றியுள்ளார்.

"ஒரு பொருளே தெய்வம் - நீ
உகந்து தொழு நெஞ்சே
உடைந்து மனம் நெஞ்சே - அந்த
ஒரு பரனுக் கஞ்சே." என்பது முதற்பாட்டாகும்.

**ஞான தச்சன் நாடகம் :**

பராபரன் மாலை என்பது ஓர் இனிய தமிழ்ப் பாமாலையாக இலங்குகின்றது. பரம்பொருளாகிய இறைவனது கருணையையும், பெருமையையும் உருக்கமாக எடுத்துரைக்கிறது.

"நீயிருக்க வேத நெறியிருக்க நெஞ்சமுற
வாயிருக்க நின்பதத்தில் வந்திருக்க
என்மனமும் போயிருக்க நின்புதல்வன்
புண்ணியனார் அன்பாயிருக்கத் தாயிருக்கச்

சேய்க்குத் தவிப்பேன் பராபரனே." எனும் இப்பாடல் மூலமாக ஆண்டவனே! உன்னை அடைவதற்கு வேத நெறியுண்டு நேசிக்க நெஞ்சமுண்டு நினைக்க மனமுண்டு மாசெல்லாம் தீர்ப்பதற்கு ஏசுநாதர் அருளுண்டு தாயிருக்கச் சேய் தவிப்பதுண்டோ? என்ற கருத்தடங்கிய பாட்டில் இரக்கமும் உருக்கமும் நிரம்பி நிற்பதை அறிய முடிகிறது.

இத்தகைய பராபரன் உலகத்தையெல்லாம் படைத்த பான்மையை வியந்து வேதநாயகம் பாடிய பாடல் 'ஞானத் தச்சன் நாடகம்' என்னும் பெயரால் வழங்குகின்றது. ஞானத் தச்சனாகிய இறைவன் ஆதி மனிதனைப் படைத்த மேன்மையும், நோவாவின் பேழையைப் பற்றிய கப்பற்பாட்டும், பிறவும் அந்நாடகத்தில் உள்ளன.

"ஞாலத்திலே ஆதி காலத்திலே - மிகு
ஞானத்திலே நன்னி தானத்திலே
கொண்டு சாலத்தமக்குத் தேவாலயமாகவே
தம்முடைய சாயலாய்த் தம்முடைய ரூபமாய்
வீடு கட்டினானே ஞானத் தச்சன்
வீடு கட்டினானே."

என்னும் பாடலைப் போன்ற நூற்றுக்கணக்கான கீர்த்தனங்கள் அந்நூலில் உண்டு. இதே போல்,

"ஞானத்திலே பரமோனத்திலே - உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு - இந்தப்
பார்க்குள்ளே நல்ல நாடு - எங்கள் பாரத நாடு."[6]

என்னும் பாரதியார் பாட்டை இதனோடு ஒப்பு நோக்கத்தக்கது.

இவ்வியலில் எழுதிய பாடல்கள், வடிவமைப்பு முறை இவைகள் மட்டும் எழுதினால் போதாது. இன்று நம் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கின்ற பல நிறுவனங்கள், அதில் பயின்ற மாணவர்கள் சொந்தமாக நடத்தி வரும் பல நிறுவனங்கள், பள்ளிகள், பள்ளிகளில் நடத்தப்படும் பாடத்திட்டங்கள் மற்றும் குழுக்களாக அமைத்து ஆலயம், பொது நிகழ்ச்சிகளில் கையாளுகின்ற கலை நிகழ்ச்சி முறைகள் மற்றும் நாட்டிய நாடகத்தில் விவிலிய கருத்துக்கள் தாளாக எழுதியும் மற்றும் பல அறிஞர்கள் எழுதிய பாடல்கள் இயேசு காவியம், ஆரோக்கியசாமி இதுபோல் பலர் இவைகளை கொண்டு தனக்கொன்று ஒரு கலைக்குழு அமைத்துள்ளார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு எழுதப்பட வேண்டும்.

திருச்சி கலைக்காவிரி நடனக்குழு விவிலியத்திலிருந்து காணாமல் போன காசு, கானானியர் பெண் கருத்துக்கள் கொண்டு நாட்டிய நாடக வடிவில் புதுபொலிவுடன் விளங்குகின்றன. இதில் பயின்ற மாணவர்கள் பலர் இதே வடிவில் கலைநிகழ்ச்சிகள் நடத்தி கொண்டு வருகின்றனர். இதில் நெய்வேலி கிருபாகரி நிறுவனமும் ஒன்று. இதில், செபம் செய்யும் முறை ஆயக்காரர், பரிசேயர், கைப்பெண்ணின் நீதி வழங்கிய மன்னன், இப்தா புதல்வி, பத்துக்கன்னியர்கள் போன்ற விவிலியத்தின் உவமைகள், கதைகள் நாட்டிய நாடகமாக வடிவமைத்து நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறார்கள்.

**முடிவுரை :**

நாட்டிய நாடகத்தில் விவிலியத்தின் பங்கு என்னும் தலைப்பின்கீழ் அமைந்துள்ள நாட்டிய நாடக நூல்கள் மக்கள் இறை நம்பிக்கையின் மூலமாக விளங்க கூடிய விவிலியத்தின் சாராம்சத்தை பின்பற்றியே குறவஞ்சியானது நாட்டிய நாடகத்திற்கென்றே சுருக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. சிற்றிலக்கியங்களில் குறவஞ்சி இலக்கியம் நம்மிடையே மிகக் குறைவு. நம்மிடையே காணப்படும் குறவஞ்சிகளுள் இக்குறவஞ்சி நாட்டிய நாடகமாக மக்களிடையே அருள்நாதர் இயேசுவையும் அவர்தம் மணவாட்டி திருச்சபையைப் பற்றி இசை நடன நாட்டிய நாடக உருவில் ஆடப்படுகின்றன.

**அடிக்குறிப்புகள் :**

1. பேரா.எம்மார் அடைக்கலசாமி, தமிழ் இலக்கிய வரலாறு ப.302
2. குறள் 332
3. பன்னிருப்பாட்டியல் நூ. 217
4. சே. சுந்தரனார், பெத்லகேம் குறவஞ்சி, முன்னுரை
5. சே. சுந்தரனார், பெத்லகேம் குறவஞ்சி, சிங்கன் சிங்கியோடு சம்பாஷித்தல் பா.1

6 .அ. சீனிவாசன், பாரதியின் புதிய ஆத்திச்சூடி ப.140

IJCRT